# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 126/மா/2026**
**நாள்: 17.07.2026**

R. சிட்டிபாபு,
சென்னை–600 060 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–2
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 060, மாதவரம், மஞ்சம்பாக்கம், காமராஜர் சாலை, 8வது குறுக்கு தெரு, கதவு எண் 4/186 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. சிட்டிபாபு என்பவரின் 03.03.2026 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.03.2026 அன்று பெறப்பட்டு 126/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 060, மாதவரம், மஞ்சம்பாக்கம், காமராஜர் சாலை, 8வது குறுக்கு தெரு, கதவு எண் 4/186 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. சிட்டிபாபு என்பவர் தனது 03.03.2026 மற்றும் 24.03.2026 நாளிட்ட மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"**03.03.2026 நாளிட்ட மனு**

"நாங்கள் மேற்கண்ட விலாசம் உள்ள தெருவில் வசித்து வருகிறோம். மொத்தம் 4 வீடுகள் மட்டுமே உள்ளன. ஒரு சிறிய தெரு. இங்கு உள்ள அனைவரும் (3 வீடுகள்) சென்னை மாநகராட்சி செலுத்த வேண்டிய சொத்துவரி, வராத தண்ணீருக்கு குடிநீர் வரி–கட்டமைப்பு வசதி கிடையாது. மணலி மண்டலம் அலுவலர்கள் (A.E, J.E.) சாலை வசதி, மின்சார கம்பம் (ஒரு தெருவிளக்கு கடந்து பத்து வருடங்களாக இல்லை) கழிவு நீர் வெளியேறும் கட்டமைப்புகள் செய்து தரவில்லை. இது தொடர்பான பலமுறை நேரில் கடிதம் கொடுத்தும் மற்றும் RTI மூலமும் கேட்டால் தவறான தகவல் அளித்தும் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் & A.E., J.E. (சாலை, மின்சார கம்பம், சுகாதாரம்) செய்து தராமல் மக்கள் ஏமாற்றி வருகிறார்கள்.''

<u>24.03.2026 நாளிட்ட மனு</u>

03.03.2026 அன்று மனு அளித்துள்ளேன். சென்னை மாநகராட்சி, மணலி, மாத்தூர், மண்டலம் 2, பகுதி 5, கோட்டம் 19 மனு தொடர்பாக கூடுதல் விவரங்கள் சேர்க்க வேண்டி மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான இணைக்கப்பட்ட ஆவணங்களில் மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளருக்கு அனுப்பிய 11.06.2016 மற்றும் 31.01.2024 நாளிட்ட மனுக்களில், மனுதாரரின் வீட்டின் தெருவில் உள்ள மண் தெருவினை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றித் தருமாறு கோரப்பட்டுள்ளது.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 15.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 (மணலி)—ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2—ன் இணை இயக்குநர் / உதவி ஆணையர் (மு.நி.) தனது 29.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:—

"மனுதாரர் புகார் மனு குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு சமர்ப்பிப்பது யாதெனில்,

| வ. எண் | மனுதாரரால் கோரப்படும் தகவல்கள் | வழங்கப்படும் தகவல்கள் |
|---|---|---|
| 1 முதல் 10 | மேற்கண்ட விலாசத்தில் 2016 ஆண்டு முதல் வீடு கட்டி வசித்து வருகிறோம். நான் வசிக்கும் தெருவில் மொத்தம் 4 வீடுகள் மட்டுமே உள்ளது. இந்த தெரு காமராஜர் மஞ்சம்பாக்கம் மாதவரம் பகுதியில் அமைந்துள்ளது. கடந்த 2016 முதல் நான் அடிப்படை வசதிகள் கேட்டு சாலை வசதி கேட்டு மண்டல துணை அதிகாரிகளுக்கு 2016 முதல் தொடர்ச்சியாக கடிதம் கொடுத்து வருகிறேன். அவர்கள் அதற்கான பதிலையும் தருவது இல்லை. மேலும் மண்டல துறை அதிகாரிகளுக்கும் தலைமை மேலதிகாரிகளுக்கும் மேல்முறையீட்டு தொடர்ச்சியாக 10 வருடங்களாக கடிதம் கொடுத்தும் பதிவு தபால் மூலமாகவும் பொது தகவல் அலுவலர் அவர்களுக்கும், மேல்முறையீட்டு அலுவலர்களுக்கும், ரிப்பன் மாளிகை வருவாய் அலுவலர் அவர்களுக்கும் தொடர்ச்சியாக கடிதங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6(1), 6 (3), 7(1) மேல்முறையீடு 19 (1) பதிவு தபால் மூலமாக அனுப்பியும் இதுவரையில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. பதில் கடிதமும் இல்லை. எனக்கு வயது 62 | மனுதாரர் வசிக்கும் வீடு காமராஜர் நகர் பிரதான சாலையின் குறுக்கு தெருவாக உள்ள தனியருக்கு சொந்தமான (Common Passage) பொது பாதை ஆகும்.<br>மனுதாரர்கள் வசிக்கும் வீடு உள்ள பகுதி தனியருக்கு சொந்தமான பொது பாதையாகும். பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்பதை மனுதாரருக்கு கீழ்கண்ட தேதிகளில் பதில் மனுதாரருக்கு அனுப்பப் பட்டுள்ளது.<br>1. நாள் 19/06/2025<br>2. நாள் 26.08.2025<br>3. நாள் 29.09.2025<br>4. நாள் 04.11.2025 |

| | | |
|---|---|---|
| | பார்க்காமலும் என்னை அழைத்து மன உளைச்சல் கொடுத்து காலவரையும் பணவரையும் கொடுத்து மன உளைச்சல் ஏற்படுத்தி உள்ளார்கள். இது மனித உரிமை மீறலாகும் | |
| 11. | சென்னை மாநகராட்சி, மணலி, மண்டலம். இது சம்பந்தமாக நாங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் வழியாக கேட்ட பொழுது இது தனியார் தெரு மற்றும் தங்களுக்கு சொந்தமான தெரு என்று மாற்றி மாற்றி பதில் சொல்கிறீர்கள் தனியார் தெருக்களில் சொத்து வரி குடிநீர் வரி மற்றும் பெற்றுக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கக் கூடாது என்று அரசு சுற்றறிகையோ அரசாணையோ இருந்தால் அதன் ஒளி நகலை எங்களுக்கு தரவும் | இது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படாத தனியாருக்கு சொந்தமான (Common Passage) பொது பாதை ஆகும்.<br><br>மேலும் CMDA (ம) DTCP Approval மனை பிரிவுகளில் மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சாலை அமைக்க இயலும். Tamil Nadu Combined Development and Building Rule 2019-ன்படி 47(A) i, ii, iii ன்படி 4.80 m அகலம் வரை உள்ள சாலை தனியாருக்கு சொந்தமான வழி ஆக அரசு விதிப்படி உள்ளது. எனவே, தனியருக்கு சொந்தமான இந்த இடம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கண்ட 6 அடி அகலம் உள்ள கான்கிரிட் சாலை அமைக்க இயலும் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |
| 12. | சென்னை மாநகராட்சி மணலி மண்டலம் இது சம்பந்தமாக நாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வழியாக கேட்ட பொழுது இது தனியார் தெரு மற்றும் தங்களுக்கு சொந்தமான தெரு என்று மாற்றி மாற்றி பதில் சொல்கிறீர்கள். தனியார் தெருக்களில் சொத்து வரி குடிநீர் வரி மற்றும் பெற்றுக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கக் கூடாது என்று அரசு சுற்றறிக்கையோ அரசாணையோ இருந்தால் அதன் ஒளி நகலை எங்களுக்கு தரவும். | |

4. இந்நிலையில், மனுதாரர் தனது 02.06.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> "நான் குடியிருக்கும் தெருவிற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கேட்டு மனு 11.06.2016, 31.01.2024, 03.05.2024, 11/2024, 26.06.2024, 08.11.2024, 19.12.2024, 17.03.2025, 05.05.2025, 08.05.2025 தேதிகளில் கடிதம் அனுப்பினால் அதற்கு பதில் கடிதம் தராமல் மன உளைச்சல் உள்ளாக்குவதும், அதேசமயம் முதலமைச்சர் பிரிவிற்கு மட்டும் மனு செய்தால், அதற்கு மட்டும் பதில் எனக்கு தராமல், பதில் முதலமைச்சர் பிரிவிற்கு மட்டும் அனுப்பி file complaint-close செய்து வருவது தொடர் கதையாக உள்ளது. இதில் தொடர்பான முதலமைச்சர் பிரிவிற்கு மட்டும் பதில் அளித்த கடிதம் நான் CM Cell பிரிவிற்கு சென்று கேட்டு பெற்று வந்துள்ளேன் என்பதை மன வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை எனக்கு நேரடியாக எந்த ஒரு பதில் கடிதம் அனுப்பியது இல்லை."

5. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 19.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 25.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நாங்கள் மேற்கண்ட விலாசம் உள்ள தெருவில் வசித்து வருகிறோம். மொத்தம் 4 வீடுகள் மட்டுமே உள்ளன. ஒரு சிறிய தெரு. இங்கு உள்ள அனைவரும் சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரி, வராத தண்ணீருக்கு குடிநீர் செலுத்தி வருகிறோம். ஆனால் கட்டமைப்பு வசதி கிடையாது. மணலி மண்டலம் அலுவலர்கள் சாலை வசதி, மின்சார கம்பம் (ஒரு தெருவிளக்கு கடந்து பத்து வருடங்களாக இல்லை) கழிவு நீர் வெளியேறும் கட்டமைப்புகள் செய்து தரவில்லை. இது தொடர்பான 2016ம் ஆண்டு முதல் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தில் அலுவலர்களை நேரில் சந்தித்தும், பல மனுக்கள் அளித்தும் இதுவரை பதில் அளிக்கவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலகத்தால் கோரப்பட்டவாறு தெருவில் வசிக்கும் மக்களின் ஆட்சேபணையில்லை என்ற சான்று சமர்ப்பித்துள்ளேன். ஆனால் பெயர் தெரியாத ஒருவர் ஆட்சேபணை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அன்னாரினால் ஏதும் எழுத்து பூர்வமான ஆட்சேபணை கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தில் அளிக்கப்படவில்லை.

இத்துடன் எனது விரிவான எழுத்து பூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பிக்கிறேன்.

எனவே, எனது வீடு அமைந்துள்ள எங்கள் தெருவில் குடிநீர், கழிவு நீர் கால்வாய், சாலை வசதி, மற்றும் தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை செய்து தர பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

7. மேலும் மனுதாரர் 25.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் கீழ்க்கண்டவாறு தனது எழுத்துபூர்வ வாக்குமூலத்தை அளித்துள்ளார்:–

"இந்த வழக்கில் சென்னை மாநகராட்சி சார்பில் "குறிப்பிட்ட தெரு மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை" என்று கூறப்படுவது, கடந்த 10 ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வரும் பொதுமக்களின் நியாயமான உரிமைகளை மறைக்கும் நிர்வாக காரணமாக மட்டுமே உள்ளது என்பதை இந்த மாண்புமிகு முறைமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

நான் வசிக்கும் மஞ்சம்பாக்கம் பகுதி சென்னை மாநகராட்சியின் நிர்வாக எல்லைக்குள் உள்ளது. அப்பகுதியில் மக்கள் நீண்ட காலமாக நிரந்தரமாக வசித்து வருகின்றனர். மாநகராட்சி தொடர்ந்து:

- சொத்துவரி வசூலிக்கிறது
- குடிநீர் மற்றும் உள்ளாட்சி கட்டணங்களை வசூலிக்கிறது
- குடியிருப்பு பயன்பாட்டை மறுக்கவில்லை
- குடியிருப்போரின் NOC–ஐ அதிகாரப்பூர்வமாக பெற்றுக் கொண்டுள்ளது

ஆனால், சாலை, தெருவிளக்கு, வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் கேட்கப்படும்போது மட்டும் "ஒப்படைப்பு செய்யப்படவில்லை" என்று கூறுவது சட்ட ரீதியாகவும், நியாய ரீதியாகவும் ஏற்றுக் கொள்ள முடியாத முரண்பாடான நிலைப்பாடாகும்.

குறிப்பாக, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு குறிப்பிட்ட தெருவில் வசிக்கும் அனைவரும் ரூ.100/– மதிப்புள்ள ஸ்டாம்ப் பேப்பரில் தடையில்லா சான்று (No Objection Certificate) வழங்கி, கையெழுத்திட்டு, சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

அதாவது:

- குடியிருப்போர் எதிர்ப்பு இல்லை
- பொதுவசதி அமைப்பதற்கு ஒப்புதல் உள்ளது
- தெரு நடைமுறையில் பொதுப் பயன்பாட்டில் உள்ளது
- மாநகராட்சி நடவடிக்கை எடுக்க தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது

இந்நிலையிலும் மாநகராட்சி செயல்படாமல் இருப்பது வெளிப்படையான நிர்வாக அலட்சியம் ஆகும். மேலும், Revenue Standing Order RSO 26(15) தெளிவாக பொதுமக்கள் பயன்படுத்தி வரும் pathwayஅல்லது cart track–ஐ மறுக்கவோ தடுக்கவோ கூடாது என்று குறிப்பிடுகிறது. நீண்டகாலமாக பொதுமக்கள் பயன்படுத்தி வரும் பாதை மீது பொதுப் பயன்பாட்டு உரிமை உருவாகும் என்பதை நீதிமன்றங்கள் ஏற்கனவே பலமுறை உறுதி செய்துள்ளன.

அதேபோல் இந்திய Easements Act, 1882 கீழ் Easement Right மற்றும் Right of Way உரிமைகள் சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட உரிமைகளாகும்.

ஒரு பாதை தொடர்ந்து மக்கள் பயன்பாட்டில் இருந்தால்:

- அந்த பாதை வெறும் “தனியார் நிலம்” என்ற காரணத்தால் பொதுமக்கள் பயன்பாட்டிலிருந்து மறுக்கப்பட முடியாது.
- Ingress and egress உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.
- பொதுப்பயன்பாடு மற்றும் வாழ்வுரிமை முக்கியத்துவம் பெற வேண்டும்.

என்பது நிலையான சட்டக் கொள்கையாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் Article 21 கீழ் மனித கண்ணியத்துடன் வாழும் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாலை இல்லாமல், தெருவிளக்கு இல்லாமல், கழிவுநீர் வடிகால் இல்லாமல் பாதுகாப்பற்ற சூழலில் வாழ வேண்டிய நிலை Article 21 வாழ்வுரிமைக்கு நேரடியான மீறலாகும்.

ஒரு உள்ளாட்சி அமைப்பு:

- வரி வசூலிக்கலாம்.
- குடியிருப்பு பயன்பாட்டை அனுமதிக்கலாம்.
- NOC பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால்,

- சாலை தர முடியாது.
- தெருவிளக்கு தர முடியாது.
- வடிகால் அமைக்க முடியாது.

என்று கூறுவது அரசியமைப்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கத்திற்காக எதிரானது. Municipal Corporation Chandigarh Vs Shantikunj Investment Pvt Ltd” வழக்கில் உச்சநீதிமன்றம், பொதுமக்கள் பயன்பாட்டிற்கான அடிப்படை வசதிகளை

ஏற்படுத்துவது உள்ளாட்சி அமைப்புகளின் தொடர்ச்சியான பொறுப்பு என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

எனவே, "ஒப்படைப்பு செய்யப்படவில்லை" என்ற காரணம் இந்த வழக்கில் முழுமையான சட்டபூர்வ பாதுகாப்பாக பயன்படுத்த முடியாது.

ஏனெனில்:

- மக்கள் 10 ஆண்டுகளாக வசித்து வருகின்றனர்.
- மாநகராட்சி வரி வசூலித்து வருகிறது.
- பொதுப் பயன்பாடு நிரூபிக்கப்பட்டுள்ளது.
- NOC வழங்கப்பட்டுள்ளது.
- மக்கள் அடிப்படை வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழலில் மாநகராட்சி நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அதிகார துஷ்பிரயோகம் மற்றும் நிர்வாக அலட்சியம் ஆகும். இந்த தெரு மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை என்ற ஒரே காரணத்தை மட்டும் கூறி, 10 ஆண்டுகளாக வசித்து வரும் பொதுமக்களின் அடிப்படை வசதி கோரிக்கையை நிராகரிப்பது:

- RSO 26(15) நோக்கத்திற்கும்,
- Easement rights கொள்கைக்கும்,
- Article 21 வாழ்வுரிமைக்கும்,,
- இயற்கை நியாயக் கொள்கைக்கும் எதிரானதாகும்.

பொதுமக்களின் வாழ்வுரிமையை பாதுகாத்து இடைக்கால நிவாரண நடவடிக்கைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

சென்னை மாநகராட்சி வரி வசூலிக்கப்படும்போது இந்த பகுதி மாநகராட்சிக்குள் வருகிறது. ஆனால் மக்கள் சாலை கேட்கும் போது மட்டும் "ஒப்படைப்பு இல்லை" என்று கூறுவது சட்டத்தையும் நியாயத்தையும் தவிர்க்கும் நிர்வாக காரணமாக மட்டுமே உள்ளது.

ஆகையால் இந்த மாண்புமிகு முறைமன்றம்,

(1) "ஒப்படைப்பு இல்லை" என்ற காரணத்தை மட்டும் ஏற்று கொள்ளாமல் நிலைமையின் உண்மை தன்மையை பரிசீலிக்க வேண்டும்.

(2) குறிப்பிட்ட தெருவில் உடனடி கள ஆய்வு நடத்த உத்திரவிட வேண்டும்.

(3) சாலை, தெருவிளக்கு, மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வசதிகளை கால கெடுவுடன் ஏற்படுத்த மண்டலம் 2 மாநகராட்சிக்கு உத்தரவிட வேண்டும்.

(4) 2016 முதல் அளிக்கப்பட்ட மனுக்கள்,

1. உதவி பொறியாளர் (சாலை பொறுப்பு) மனு நாள் – 11.06.2016 Zone 2 மனு நாள் 31.01.2024.
2. உதவி பொறியாளர் (சாலை பொறுப்பு) மனு நாள் 31.01.2024.
3. மண்டல அலுவலர் – ந.க. எண் 11/2024 நாள் 03.05.2024.
4. மண்டல அலுவலர் – ந.க. எண் 11/2024 நாள் 0.11.2024.
5. துணை பொறியாளர் சாலை பொது மனு நாள் 26.06.2024.
6. R.T.I. 2005–6 (1) மனு நாள் 18.11.2024.

7. R.T.I. 2005–19 (1) மனு நாள் 19.12.2024.
8. R.T.I. 2005–6 (1) மனு நாள் 17.03.2025.
9. R.T.I. 2005–19 (1) மனு நாள் 05.05.2025.
10. R.T.I. M.T.A. 2005–19 (3) மனு நாள் 08.05.2025.

மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி முழு அறிக்கையை தாக்கல் செய்ய உத்திரவிடவேண்டும்.

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் 25.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் புகார் மனு குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு சமர்ப்பிப்பது யாதெனில், மனுதாரர் வசிக்கும் வீடு காமராஜர் நகர் பிரதான சாலையின் 8வது குறுக்கு தெருவாக உள்ள தனியருக்கு சொந்தமான (Common Passage) பொது பாதை ஆகும். மனுதாரர்கள் வசிக்கும் வீடு உள்ள பகுதி தனியருக்கு சொந்தமானபெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படாத தனியாருக்கு சொந்தமான பொதுபாதை ஆகும். பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்பதை மனுதாரருக்கு கீழ்கண்ட தேதிகளில் பதில் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. நாள் 19/06/2025.
2. நாள் 26.08.2025.
3. நாள் 29.09.2025.
4. நாள் 04.11.2025.

மேலும் CMDA (ம) DTCP Approval மனை பிரிவுகளில் மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சாலை அமைக்க இயலும். Tamil Nadu Combined Development and Building Rule 2019-ன்படி 47(A) i, ii, iii ன்படி மற்றும் B-ன்படியும், 4.80 m அகலம் வரை உள்ள சாலை தனியாருக்கு சொந்தமான வழி ஆக அரசு விதிப்படி உள்ளது. இதன்படி மனுதாரர் அந்த பொது பாதையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு Gift Deed மூலம் ஒப்படைக்கலாம். மனுதாரர் குறிப்பிட்ட தனியாருக்கு சொந்தமான பொது பாதையில் அமைந்துள்ள ஒரு வீட்டின் உரிமையாளர் வாய் மொழியாக ஆட்சேபணை தெரிவித்து வருகிறார். மேலும் தடையில்லா சான்றினிலும் அவர் கையொப்பம் இடவில்லை.

எனவே, தனியருக்கு சொந்தமான மனுதாரர் குறிப்பிட்ட இடம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கண்ட 6 அடி அகலம் உள்ள சாலை வசதி செய்து தர பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."

9. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எழுத்துபூர்வ வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் இணை இயக்குநர்/உதவி ஆணையர் (மு.நி.) அவர்களின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–600 060, மாதவரம், மஞ்சம்பாக்கம், காமராஜர் சாலை, 8வது குறுக்கு தெரு என்ற சிறிய தெருவில் மொத்தம் 4 வீடுகள் மட்டுமே உள்ளன என்பதும், இங்கு உள்ள அனைவரும் சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரி, குடிநீர் வரி செலுத்துகிறார்கள் என்பதும், சாலை வசதி, மின்சார கம்பம் மற்றும் கழிவு நீர் வெளியேறும் குழாய்கள் போன்று உள்கட்டமைப்புகள் செய்து தரக்கோரி 2016ம் ஆண்டு முதல் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தில் அலுவலர்களை நேரிலும் மற்றும் பல மனுக்கள் அளிக்கப்பட்டும், நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலகத்தால் கோரப்பட்டவாறு மேற்கண்ட தெருவில் வசிக்கும் மக்களின் ஆட்சேபணையில்லை என்ற சான்று சமர்ப்பிக்கப்பட்டது என்பதும், ஆனால் பெயர் தெரியாத ஒருவர் ஆட்சேபணை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அன்னாரினால் ஏதும் எழுத்து பூர்வமான ஆட்சேபணை கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தில் தனக்கு அளிக்கப்படவில்லை என்பதும், மனுதாரர் வீடு அமைந்துள்ள தெருவில் குடிநீர், கழிவு நீர் கால்வாய், சாலை வசதி, மற்றும் தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை செய்து தர பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் வசிக்கும் வீடு காமராஜர் நகர் பிரதான சாலையின் 8வது குறுக்கு தெருவானது, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படாத தனியாருக்கு சொந்தமான பொதுபாதை (Common Passage) என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்பதும், மனுதாரர் அளித்த மனுக்களுக்கு பதிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், CMDA (ம) DTCP Approval மனை பிரிவுகளில் மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சாலை அமைக்க இயலும் என்பதும், Tamil Nadu Combined Development and Building Rule 2019-ன்படி 47(A) i, ii, iii ன்படி மற்றும் B-ன்படியும், 4.80 m அகலம் வரை உள்ள சாலை தனியாருக்கு சொந்தமான வழி ஆக உள்ளது என்பதும், இதன்படி மனுதாரர் அந்த பொது பாதையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு Gift Deed மூலம் ஒப்படைக்கலாம் என்பதும், ஆனால் மேற்கண்ட தனியாருக்கு சொந்தமான பொது பாதையில் அமைந்துள்ள ஒரு வீட்டின் உரிமையாளர் வாய் மொழியாக ஆட்சேபணை தெரிவித்துள்ளார் என்பதும், தடையில்லா சான்றினிலும் அவர் கையொப்பம் இடவில்லை என்பதும், எனவே, தனியருக்கு சொந்தமான மனுதாரர் குறிப்பிட்ட இடம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கண்ட 6 அடி அகலம் உள்ள சாலைக்கு சாலை வசதி செய்து தர பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் இணை இயக்குநர் / உதவி ஆணையர் (மு.நி)–ன் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் வசிக்கும் வீடு மாதவரம், மஞ்சம்பாக்கம், காமராஜர் நகர் பிரதான சாலையின் 8வது குறுக்கு தெருவானது, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படாத தனியாருக்கு சொந்தமான பொதுபாதை என்பதால், மேற்கண்ட தெருவில் வசிக்கும் அனைத்து வீட்டின் உரிமையாளர்கள் Gift Deed மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கண்ட 6 அடி அகலம் உள்ள தெருவில், சாலை வசதி செய்து தர பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் அத்தெருவில் வசிக்கும் அனைத்து வீட்டின்

உரிமையாளர்களிடம் Gift Deed பெற்று சமர்ப்பிக்கும் நேர்வில், அதனடிப்படையில் உரிய விதிகளுக்கு உட்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B R. சிட்டிபாபு,
கதவு எண் 4/186,
காமராஜர் சாலை, 8வது குறுக்கு தெரு,
மஞ்சம்பாக்கம், மாதவரம்,
சென்னை–600 060.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 2, மணலி,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 1, காமராஜர் சாலை,
சென்னை–600 068.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.